உ

குடியாண்மைச் சட்டம், 1939.

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம்,

பர்மா, இரங்கோன்.

1939

நீதி இலாகா

சட்டமியற்றும் பிரிவு

கீழ்வரும் பர்மா சட்டசபைச் சட்டம் பொதுமக்கள் தெரிந்துகொள்வதற்காகப் பிரசுரிக்கப்பெற்றுள்ளது.

இம் மசோதாவுக்கு மே. த. கவர்னர் சம்மதம் 1939 ஹு ஏப்ரல்மீ 29உ. கொடுக்கப் பெற்றது.

உத்திரவுப்படி,

எப். எஸ். வி. டான்னிஸன்.

பர்மா சர்க்கார் நீதி இலாகா காரியதரிசி.

1939 ஹூத்திய குடியாண்மைச் சட்டம்

(1939 ஹூத்திய 10வது நெம்பர் பர்மா சட்டம்)

விவசாய குடியாண்மைகள் சம்பந்தமான சில விஷயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கான மசோதா.

விவசாய குடியாண்மைகளை ஒழுங்கு செய்ய வேண்டிய அவசியமிருப்பதால் கீழ்க் கண்டபடி சட்டமியற்றப் பெற்றுள்ளது:—

அத்தியாயம் 1.

முன்னுரை.

குறுகிய தலைப்பும் ஆரம்பமும் வியாபகமும்

1. (1) இச்சட்டம் 1938 ஹூத்திய குடியாண்மைச் சட்டமென வழங்கப் பெறலாம்.

(2) இச்சட்டம் கவர்னர் அறிக்கையின் மூலம் தெரிவிக்கும் தேதியில் அமுலுக்கு வரும்.

(3) இச்சட்டம் பிரிட்டிஷ் பர்மா முழுதும் வியாபிக்கும். ஆனால் கவர்னர் அறிக்கை மூலம் எப்பகுதியையும் இச்சட்டத்தின் முழு அல்லது ஒரு பகுதியின் ஆதிக்கத்தினின்றும் விலக்கலாம்.

2. **அதிகமான நிலப்பரப்பை யுடைய குடியானவர்களை விலக்குதல்**

குறிப்பிடப்பெறும் பரப்புக்கு அதிகமான குடியாண்மை அல்லது குடியாண்மைகளை வைத்திருக்கும் எக்குடியானவனுக்கும் இச்சட்டத்தில் எதுவும் பொருந்தாது.

3. **வியாக்கியானங்கள்**

இச்சட்டத்தை சாதாரணமுறையில் அருத்தம் செய்வதிலோ அல்லது சமய சந்தர்ப்பத்தில் வியாக்கியானம் செய்வதிலோ ஏதும் முரணிருந்தாலொழிய:—

(1) "விவசாயி" என்பவன் கீழ்கண்ட தகுதியுடையவனாக இருக்க வேண்டும்.

(a) தன் ஜீவியத்தின் முக்கிய மார்க்கமாகத்தன் சொந்தக் கைகளால் நிலத்தைப் பயிரிடும் அல்லது வழக்கமாகவே நிலம் சாகுபடி செய்பவன்;

அல்லது

(b) கீழ்வரும் இரண்டு நிபந்தனைகளையும் திருப்தி செய்யும் ஒருவன், அதாவது

(i) வருஷத்தில் வேலை செய்யும் காலங்கள் பூராவும் தானே நிலத்தை சாகுபடி செய்வதை மேற்பார்ப்பவன்; மேலும்

(ii) தன்னுடைய வருவாயின் பெரும் பாகத்தை அத்தகைய மேற்பார்வையாலடைவது அல்லது தன் சொந்தக் கைகளால் பயிரிடுவதாலும் அத்தகைய மேற்பார்வையாலும் சேர்ந்து சம்பாதிப்பவன்,

(2) "சார்ஜ்" என்பது இச்சட்டத்தின் 5வது செக்ஷன்படி ஏற்படுத்தும் நிபந்தனையை அல்லது உரிமையை (சார்ஜ்ஜை)க்குறிக்கும்.

3) "அபிவிருத்தி" என்பது இச்சட்டம் அமுலுக்கு வந்தபின் குடியாண்மைக்குப் பொருத்தமாய் நிலத்

தின் விளைவை அதிகரிக்கக்கூடிய நிலமராமத்து அபிவிருத்தி வேலையைக்குறிக்கும்; அதாவது:—

(a) தண்ணீர் வடிவுக்காகவும் வெள்ளத்தினின்று பாதுகாப்பதற்கெனவும் செய்யப்பெறும் கட்டு வேலை;

(b) விவசாய காரியங்களுக்காக நீரைச் சேமிக்கவும் பாச்சுவதற்காகவும் செய்யப் பெறும் கட்டு வேலை;

(c) விவசாய காரியங்களுக்காக நிலத்தைப் பண்படுத் தல், வேலியிடல், சமமாக்குதல் தளமிடல்;

(d) சாதாரண மராமத்தாயில்லாமல் முற்கூறியவற் றின் மதிப்பை நிரந்தரமாய் உயர்த்தக் கூடியபடி புதுப்பித்தல் மாற்றி அமைத்தல் அல்லது திருத்தி யமைத்தல், என்பவற்றைக் குறிக்கும்,

ஆனால் குடியானவர்களால் சாதாரணமாய் சாகு படி செய்யும்போது தனிப்பட்ட செலவில்லா மல் அல்லது வழக்கமாக இபற்றப்பெறும் உரமிடு தல், அல்லது செடி வெட்டுதல், கரையிடல், சம மிடல், வேலி போடுதல் அல்லது நீரோடை களமைத்தல் இவை போன்ற நிலத்தின் மதிப்பை உயர்த்தக்கூடாதவற்றைக் குறிக்காது.

(4) "கூலியாள்" என்பது நிலச்சாகுபடி வேலையில் கூலிக்காக நியமிக்கப்பெறுமொருவனைக்குறிக்கும்.

(5) "நிலம்" என்பது நகரத்திலோ கிராமத்திலோ எந்தக் கட்டிடத்தின் மனையாகவுமல்லாமல் விவசா யத்திற்காகவோ அல்லது விவசாயத்தைச்சார்ந்த காரியங்களுக்காகவோ உபயோகிக்கப்பெற்று வரும் சாகுபடியாகும் அல்லது சாகுபடிக்காக விடப் பெறும் நிலத்தையும் அத்தகைய நிலத்தின் பேரில் கட்டப்பெற்றுள்ள கட்டிடங்களின் மனை களையும் குறிக்கும்.

(6) "நிலச்சுவான்தார்" என்பது யாரொருவர் கீழ் குடியானவன் நிலம் சாகுபடி செய்து அவருக்கு அல்லது அவருக்காக வேறொரு நபரிடம் அக் குடியானவன் சேவா செலுத்தக்கடமைப்பட்டவ னோ அத்தகைய சுவான்தாரைக் குறிக்கும்.

(7) "லீஸ்" என்பது சொத்து மாற்றுதல் சட்டத் தின் 105 வது செக்ஷனில் வியாக்கியானம் செய் துள்ள ஸ்தாவர சொத்துக்களின் குத்தகை யை (லீஸைக்) குறிக்கும்.

(8) "குறிப்பிடப் பெற்ற" என்பது இச்சட்டத்தின் படியோ அல்லது இதன் கீழ் ஏற்படுத்தப்பெறும் விதிகளின்படியோ குறிக்கப் பெற்றதைக் காட் டும்.

(9) "சேவா" என்பது நிலச்சுவான்தாருக்கோ அல் லது அவருக்காவோ குடியானவன் தான் அனுப விக்கும் நிலத்திற்காகச் செலுத்தும் பணம், பண் டம் அல்லது ஊழியம் முதலியவற்றைக்குறிக்கும்.

(10) "ரெவினியூ ஆபீசர்" என்பது இச் சட்டத்தின் கீழ் ரெவினியூ ஆபீசரால் செய்ய வேண்டியதென குறிக்கப்பெற்றுள்ள எக்காரியத்தையும் செய்வ தற்காகக் கவர்னரால் நியமிக்கப்பெற்ற ஒருவ ரைக் குறிக்கும். ஆனால் ஒரு சப்டிவிஷனின் அதி காரத்திலிருக்கும் மியூக்தைத் தவிர்த்து, விசேஷ காரணங்களை முன்னிட்டு நியமிக்கப்பெற்ற ஒரு யெக்ஸ்டிரா அஸிஸ்டண்ட் கமிஷனர், (Extra Assistant Commissioner) லாண்டு ரிகார்டு ஸுப்பிரண்டண்ட் (Land Record Superintendent) இவர்களுக்குக் குறைந்த அந்தஸ் துள்ள எவரையும் ரெவினியூ ஆபீசராக நியமிக் கப்படமாட்டாது.

(11) "குடியானவன்" என்பது மற்றொருவர் கீழ் நிலம் பெற்று அந் நிலத்திற்காக அவருக்கு அல்

லது அவருக்காக அன்னாரின் கூட்டாளியாகிய பிறரொருவருக்கு சேவா செலுத்தக் கடமைப்பட்டவனைக் குறிக்குப்; ஆனால் இது நில அடமானம் பெற்றுள்ளவரையோ (Mortgagee) ஏஜண்டையோ அல்லது நிலச்சுவான்தாரால் வேலைக்கு அமர்த்தப்பெறும் கூலிக்காரனையோ அல்லதுசர்க்கார் இலாகாவின் கீழுள்ள குடியானவனையோ குறிக்காது.

(12) "குடியாண்மை" என்பதுஒருதனிக்குத்தகையின் (லீசின்) கீழ் ஒரு குடியானவன் சாகுபடி செய்யும் நிலப்பரப்பைக் குறிக்கும்.

(13) "குடியாண்மை வருஷம்" என்பது பர்மிய புது வருஷத்திற்குப் பதினைந்து நாட்களுக்கு முன் ஆரம்பமாகி அதினின்றும் பனிரெண்டு மாதங்களை அல்லது யாதொரு நில வகையைக் குறித்தும் அதன் குத்தகைகளுக்கென கவர்னரால் அறிக்கை மூலம் குறிப்பிட்ட தினத்தினின்றும் ஆரம்பமாகும் ஒரு குறிப்பிட்ட கால அளவைக் குறிக்கும்.

(14) "கூலி" என்பது நிலம் சாகுபடி செய்வதில் வேலை செய்வதற்காக ஒரு கூலிக்காரனுக்குப் பணமாகவோ பண்டமாகவோ கொடுக்கச் சம்மதிக்கும் அளவைக் குறிக்கும்.

அத்தியாயம் 2.

நிலச்சுவான்தார், வேலைக்காரர்கள், கால்நடைச் சொந்தக்காரர் களுக்குள்ள (சார்ஜ்ஜுகள்) நிபந்தனைகளும் உரிமைகளும்

4. சிவில் புரொஸிஜர் கோடின் 61 வது செக்ஷனில் கண்டுள்ள விஷயங்களின்படி ஜப்தி செய்வதினின்றும் விடுதலை செய்யப் பெற்றுள்ள விவசாய விளைபொருள்களை இவ்வத்தியாயத்தினுள்ள தெதுவும் பாதிக்காது.

5. (1) ஒரு நிலத்துக்காக நடப்புக் குடியாண்மை வருஷத்தில் அந்நிலச்சுவான்தாருக்குச் செலுத்தப்பெறாத சேவாவும் அதே வருஷத்தில் குடியானவனால் நியமிக்கப் பெற்ற அவசியமான (தேவைக்கு மேற்போகாத) கூலியான்களின் கூலியும் சம அந்தஸ்தோடு அவ் வருஷத்திய விளைபொருளின் மேல் முதல் (சார்ஜ்ஜு) உரிமையாகவிருக்கும்.

விளைபொருளின் மேலுள்ள (சார்ஜ்ஜுகள்) உரிமைகள்

(2) நடப்புக்குடியாண்மை வருஷத்தில் சாகுபடிசெலவுகளுக்காக குடியானவனுக்கு நிலச்சுவான்தாரால் கொடுக்கப்பெறும் பண உதவியும் அத்தகைய பண உதவியின் பேரில் ஏற்பட்ட வட்டியும் அதே வருஷத்தின் கால் நடைகளின் வாடகையும் அவ் வருஷத்திய விளை பொருளின் மேல் சம அந்தஸ்தோடு இரண்டாவது உரிமையாக (சார்ஜ்ஜாக) விருக்கும்

ஆனால் அவ்விதம் கொடுக்கப்பெறும் பண உதவியும் அதன் வட்டியும் முறையே வக்கருக்கு இவ்வளவென்றும், நூற்றுக்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ஒரு ரூபாய் விதத்திற்கு மேற்படாமலும் போதுவாகவோ, அல்லது ஒரு தனிப்பட்ட பகுதிக்கோ சட்ட பூர்வமாக குறிப்பிடப் பெற்றதற்கு ஒத்ததாக இருக்கவேண்டும்.

(3) சொத்து மாற்றுதல் சட்டத்தில் அல்லது சிவில் புரொஸிஜர் கோடில் ஏற்கனவே என்ன கண்டிருந்தாலும் இச்சட்டத்தின் முந்திய சப் செக்ஷன்களில் ஏற்படுத்தியுள்ள நிபந்தனைகளும் உரிமைகளும் (சார்ஜ்ஜுகள்) இந்த அத்தியாயத்தில் குறிப்பிட்ட முறையினாலன்றி வேறெம்முறையிலும் நிறைவேற்ற வியலாது.

(4) சொல்லப் பெற்ற விளை பொருள் சாகுபடி நிலத்திலிருந்தும் வழக்கமாக செய்யப்பெறும் களமடித்தல், தூற்றுதல் முதலிய இதர செய்கைகளும் செய்து அப்புறப்படுத்தப் பெறும் வரையில் அத்தகைய சார்ஜ்ஜுகளுக்கு உட்பட்டிருக்கும். அத்தகைய உரிமைகளுக்கு (சார்ஜ்ஜுகளுக்கு) இவ்வத்தியாயத்தில் கண்டுள்ள விஷயங்களின்படி கொடுக்கப் பெற்றோ அல்லது வேறெவ் வகையாலும் தீர்ந்து போனாலொழிய சிவில் கோர்ட்டின் டிக்ரியை மேல் நடத்தியோ மற்றெவ்விதமாகவோ அவ்விளைபொருளை விற்பனை செய்யும்படி கட்டாயப் படுத்த முடியாது. ஆனால் அத்தகையசார்ஜுக்ளுக்கு முதலில் திருப்திசெய்யப் பெற்றபின் ஏதேனும் மீத மிருந்தால் அதனை ஜப்திசெய்யும்படியோ அல்லது ஏலம் போடும்படியோ உத்திரவு பிறப்பித்தால் அந்தவிளை பொருள் அந்தநீதிஸ்தலத்தில் சேமிக்கப்பெறும்.

(5) அவ்விளைபொருள் முதல் உரிமையை(சார்ஜ்ஜை)ப் பூரணமாய்த் திருப்தி செய்யப் போதாததாயிருந்தால் 4-வது செக்ஷனில் கண்டுள்ள விஷயங்களுக்கு உட்பட்டு நிலச்சுவான்தாருக்கும் கூலிக்காரர்களுக்கும், சேவாவுக்கும், கூலிக்கும், முறையே அவரவர்களின் ஈவுப் பிரகாரம் பகிர்ந்தளிக்கப்பெற வேண்டும்,

(6) அவ்விளை பொருள் முதல் (சார்ஜ்ஜை)த் திருப்தி செய்யப் போதியதாயும் இரண்டாவது (சார்ஜ்ஜை)ப் பூரணமாய் திருப்திசெய்யப் போதாததாயு

மிருந்தால் முதல் சார்ஜைத் திருப்தி செய்த பிறகு எஞ்சியுள்ளது நிலச்சுவான்தாருக்கும் வாடகைக்கால் நடைகளின் சொந்தக்காரருக்கும், 4-வது செக்ஷனில் குறிப்பிட்ட விஷயங்கட்குட் பட்டு அவரவர்களுக்குச் சேரவேண்டிய தொகைக்குத் தகுந்தாற்போல் முறையே ஈவுப் பிரகாரம் கொடுக்கப்பெற வேண்டும்.

(7) இந்த செக்ஷனிலுள்ள எதுவும் சர்க்காருக்குத் தமக்குச் சேரவேண்டிய தொகைகளை வசூலிக்கவுள்ள உரிமைகளைப் பாதிக்காது.

விளக்கம் இந்த செக்ஷனில் கண்டுள்ள விஷயங்களுக்காகவும் 6வது செக்ஷனுக்காகவும் (நெல்) அடிக்கவும், தூற்றவும், தானியமிதிக்கவும் அல்லது இதுபோன்ற இதர செய்கைகளைச் செய்வதற்காகவும் விளைபொருள் வைக்கப்பெறும் களம் அல்லது இதர இடங்களும் குடியாண்மையின் ஒரு பகுதியாகவே கருதப்பெறும்.

6. (1) ஜப்தி

சேவா, கூலி, கடன், வட்டி அல்லது வாடகைக் காசச் (சார்ஜை) உரிமை பெற்றுள்ள எவரும் தனக்குரியவை செலுத்தப்பெறுமுன் விளைபொருள் குடியாண்மையினின்றும் அப்புறப்படுத்தப் பெறுமென்று பயந்தால் கதிரறுப்பு அல்லது சேகரிப்பது ஆரம்பமானதும் குடியாண்மையோ அல்லது அதன் ஒரு பகுதியோ உள்ள கிராமத்தின் தலைவனிடம் (தக்கி) அவ்விளைபொருள் நிலத்திலிருக்கும் பயிர் முதலியவற்றை ஜப்தி செய்யும்படி மனுச்செய்து கேட்டுக்கொள்ளலாம்.

(2) (a) கிராமத்தலைவன் (தக்கி) இல்லாத சமயம் குடியாண்மையோ அதன் எப்பகுதியோ உள்ள கிராமக் கமிட்டியின் வேறு அங்கத்தினர் எவரிடமேனும் அம்மனுவைச் செய்து கொள்ளலாம்.

(b) கிராமக்கமிட்டி நிறுவப்பெறாத கிராமத்தில் இம்

மனு (தக்கி) கிராமத் தலைவனிடமும் அவனில்லாத போது பத்துவீட்டுக்காவலன் (சேகாங்) அல்லது ஊர்க் காவலனிடம் (யுவாகாங்) மனுச்செய்து கொள்ளலாம்.

(c) இந்த செக்ஷனில் கிராமக் கமிட்டிக்கு ஒப்படைக்கப்பெற்ற வேலைகளை (தக்கி) கிராமத் தலைவன் செய்ய வேண்டும்.

(3) யாரிடம் மனுச் செய்து கொள்ளப்பெற்றதோ அவர் உடனே விளைபொருளை ஜப்தி செய்ய ஒரு வாரண்டைப் பிறப்பிப்பதோடு ஜப்தி செய்திருக்கும் காலத்தில் அதனைப் பாதுகாப்பதற்காக மனுதாரால் குறிப்பிடப்பட்ட பொருத்தமான மனிதனை நியமிக்கவேண்டும். விளைபொருள் குடியாண்மையினின்றும் அப்புறப்படுத்தப் பெற்றிருந்தால் வாரண்டை மேல் நடத்தவியலாது. ஜப்தி செய்திருக்கும் காலத்தில் விளைபொருளைப் பாதுகாக்க நியமிக்கப் பெற்றுள்ளவர் பொது ஜன ஊழியராய்க் கருதப்பெறுவர்.

(4) ஜப்தி செய்வதென்பது வாரண்டை:—

(i) விளைபயிராயிருந்தால் அப்பயிர் விளையும் நிலத்தின் பேரிலும்

(ii) விளைபொருள் அறுவடையாகப் பெற்று அல்லது சேகரிக்கப்பெற்றிருந்தால் களத்திலோ அல்லது வேறெந்த விடத்தில் அதிருக்கிறதோ அந்த இடத்தில் ஒட்டி ஜப்தி செய்யவேண்டும்.

(5) ஜப்தி செய்யப்பெற்றிருந்தாலும், ஜப்தி செய்யப்பெற்றுள்ள விளைபொருளைக் காவல் செய்வதற்காக நியமிக்கப்பெற்றவரின் மேற்பார்வையில், குடியானவன் நிற்கும் பயிரை அறுக்கலாம், அப்பொருளை தான் வழக்கமாகச் சேமிக்குமிடத்தில் சேகரிக்கலாம்.

(6) ஜப்தி செய்துள்ள பயிரை அறுப்பதையோ அல்லது சேகரிப்பதையோ குடியானவன் செய்து முடிக்கத்தவறினால் கிலச்சுவான்தார் தனக்கு அவ்விளைபொருளின்மேல் சார்ஜ்ஜிருந்தால் ஜப்திசெய்யப்பெற்ற விளைபொருளைப் பாதுகாக்க நியமிக்கப் பெற்றவன் மேற்பார்வையில் அப்பயிரை அறுத்து சௌகர்யமான இடத்தில் சேர்க்கலாம் அல்லது அறுத்துச் சேர்க்கும்படி செய்யலாம். இந்த சப்செக்ஷன் கீழ் கிலச்சுவான்தாருக்கு ஏற்படும் எந்த நியாயமான செலவும் சேவாவோடு சேரும். கிலச்சுவான்தாருக்குச் செலுத்த வேண்டிய சேவா வசூலிக்கும் முறையில் இதையும் சேர்த்து வசூலிக்கப்பெறும்

(7) ஜப்தி செய்யப்பெற்ற ஏழு தினங்களுக்குள் 3-வது சப்செக்ஷன்படி விளைபொருளை ஜப்தி செய்வித்தவர் கிராமக் கமிட்டியாரிடம் ஜப்தி செய்த விளைபொருளை சமாசமாகப் பகிர்ந்து கொடுக்கும்படியோ அல்லது அவ்விளைபொருள்மேல் சார்ஜ்ஜுள்ளவர்களுக்கும் குடியானவனுக்கும் அவசியமான அளவு ஒதுக்கி வைக்கும்படியும் கேட்கத்தவறினால் கிராமக்கமிட்டி ஜப்தி செய்த விளைபொருளைப் பாதுகாக்க நியமித்தவருக்குத் தரும்படி குறிப்பிடப்பெற்றுள்ள அளவு விளைபொருளை ஒதுக்கி வைத்துவிட்டு ஜப்தியை உடனே நீக்கிவிட வேண்டும். ஒதுக்கி வைக்கப்பெற்ற விளைபொருளை உடையவருக்குச் செலுத்தப் பெற வேண்டும். ஆனால் விளைபொருளை ஜப்திசெய்வித்தவற்கு வரவேண்டிய பாக்கியில் ஒதுக்கிவைத்த விளைபொருளையோ அல்லது அதன் விலையையோ குறைக்கப் பெறும்.

(8) ஜப்திசெய்த ஏழுதினங்களுக்குள் 3-வது சப்செக்ஷன்படி விளைபொருளை ஜப்தி செய்தவர் கிராமக் கமிட்டியாரிடம் ஜப்தி செய்த விளைபொருளை அதன்மேல் சார்ஜ்ஜுள்ளவர்களுக்கும் குடியானவனுக்கும் சமாசமாகப் பகிர்ந்து தரும்படி அல்லது சார்ஜ்ஜுள்ளவர்களுக்குத் திருப்திதாக்

கூடிய அளவை ஒதுக்கி வைக்கும்படியோ கோரினால் கமிட்டி விளைபொருள் மேல் தமக்குச் சார்ஜிருப்பதாகத் தெரிவித்தவர்களுக்கும் அல்லது (அக்கமிட்டிக்கு) அவ்விளைபொருள் மேல் சார்ஜ்ஜுடையவர்களாய்க்கருதப்பெருபவர்களுக்கும் சம்மன் பிறப்பிக்க வேண்டும். அச்சம்மன் பிறந்த தேதியிலிருந்து ஏழுநாட்களுக்கு அதிகப்படாத குறிப்பிட்ட ஒரு காலத்திலும் இடத்திலும் தம்முன் ஆஜராகும்படி அதில் கண்டிருக்க வேண்டும். அந்த இடத்திலும் காலத்திலும் குடியானவனையும் வரும்படி நோட்டீசு கொடுக்கப் பெற வேண்டும்.

(9) அவ்விதம் குறிப்பிடப்பெற்ற இடம் நேரத்தில் அல்லது கமிட்டியாரால் விசாரணை ஒத்தி வைக்கப்பெறும் காலத்திலும் இடத்திலும் முன் சொல்லியவர்களில் ஆஜராயிருப்பவர்களை கமிட்டியார் விசாரித்து தம்மால் இபன்ற வரையில் விளைபொருளை சமாச முறையில் பகிர்ந்து கொள்ளும்படி சம்மதிக்கத் தூண்ட வேண்டும். கமிட்டியார் தமக்குமுன் ஆஜராகும் சாட்சிகளை விசாரிக்கலாம். ஆனால் சாக்ஷியத்தை எழுத்து மூலம் குறிக்கத் தேவையில்லை. கவனிப்பதற்காக ஆஜர் செய்யப் பெறும் தஸ்தாவேஜுகள் கணக்குப் புஸ்தகங்களைப் பார்வையிடலாம்.

(10) முன் சொல்லியபடி கமிட்டிமுன் ஆஜராகுபவர்களும் அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பெற்ற அவர்கள் ஏஜண்டுகளும் தமக்குள் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் கமிட்டியார் 3-வது சப் செக்ஷன் கீழ் நியமிக்கப் பெற்றுள்ளவருக்கும் அங்கத்தினருக்கும் ஊதியம் கொடுப்பதற்குத் தேவையான அளவு விளைபொருளை ஒதுக்கி வைத்துவிட்டு ஜப்தியை விலக்கி ஒப்பந்தத்திற்கேற்ப விளைபொருளைப் பகிர்ந்தளிக்க வேண்டும்.

(11) சார்ஜ்ஜுள்ள (உரிமையுள்ள) ஒருவருக்கு குறிப்பிட்ட முறையில் நோட்டீசு பிறந்த பின் அன்

ஞர் கமிட்டி முன் ஆஜராகத் தவறினுல் 10-வது சப் செக்ஷன்படி ஆஜரானவர்களுக்குள் முடிவடைந்த ஒப்பந்தத்திற்கு அவர் உட்பட வேண்டும். அவர் ஆஜரில்லாவிட்டாலும் அல்லது முன் குறிப்பிட்டபடி நோட்டீசு சார்வான பிறகும் குடியானவன் ஆஜரில்லாமற் போனுலும் 9-வது 10-வது சப் செக்ஷன்படி கமிட்டியார் விசாரணை நடத்துவதைத் தடுக்காது.

(12) ஜப்தி செய்யப்பெற்றுள்ள விளைபொருளைப் பகிர்ந்து கொள்ள கமிட்டிமுன் ஆஜராகும் சார்ஜஜுள்ளவர்களும் குடியானவனும் ஒரு ஒப்பந்தத்திற்கு வரத்தவறினுல அவ்வாறு ஒப்புக்கொள்ளத்தவறியதைக் குறிக்கும் குறிப்பிட்டமாதிரியிலுள்ள சர்ட்டிபிகேட் (சாட்சிப் பத்திரம்) ஒன்றை ஒவ்வொருவருக்கும் கமிட்டியார் தரவேண்டும்.

(13) ஷை சர்ட்டிபிகேட் கொடுத்த 20 தினங்களுக்குள் ஜப்தியைக் குறித்து யாதொரு உத்திரவும் ஒரு சிவில் கோர்ட்டினின்றும் கிடைக்காவிட்டால் 3-வது சப் செக்ஷன்படி நியமித்துள்ளவருக்கும் கமிட்டி அங்கத்தினருக்கும் ஊதியமாகத்தரப்போதிய விளைபொருளை ஒதுக்கிவைத்துவிட்டு ஜப்தியை எடுத்துவிட வேண்டும்.

(14) விளைபொருள் 3வது சப் செக்ஷன்படி ஜப்தி செய்யப்பெற்றுல் அந்த ஜப்தி விலக்கப்பெறும்போது கமிட்டியார் செலவு தொகை குறித்து உத்திரவிட வேண்டும்.

(15) முந்திய சப்செக்ஷன்களிலுள்ளவை எதுவும் சார்ஜுதாரர்கள் குடியானவர்களுடைய சம்மதத்தின் பேரில் விளைபொருளை விற்று அவ்விதம் விற்று வந்த விற்று முதல் தொகையை குறிப்பிட்டஇடத்தில் சேமித்துவைப்பதைத் தடுக்காது. அவ்விதம் விற்று முதல்சேமிக்கப்பெற்றுல் விளைபொருளின் பேரில் செய்துள்ள ஜப்தி இவ்விற்றமுதலின் பேரிலும்செய்ததாகக்கருதப்பெறும்.

(16) 12வது சப் செக்ஷன்படி சர்ட்டிபிகேட் கொடுக்கப்பெற்ற குடியானவனல்லாத ஒருவன் அச்சர்ட்டிபிகேட் கிடைத்த பத்து தினங்களுக்குள் அது சம்பந்தமான சேவா கூலி, கடன், வட்டி வாடகை அல்லது அத்தகைய சேவா கூலி கடன், வட்டி, வாடகையின் ஒரு பகுதியை வசூலிக்க வியாஜ்யம் தொடர்ந்தால் கோர்ட்டார் வியாஜ்யம் தீர்மானிக்கப் பெறும் வரையில் விவகாரத்தில் கண்ட தொகைக்கு போதுமான அளவு விளை பொருள் மேல் ஜப்தி செய்யும்படியாவது அல்லது அத்தகைய வியாச்சியத்தில் தீர்மானம் கிடைக்கும் வரையில் போதிய விளைபொருளை விற்று முதலை சேமித்து வைக்கும்படியாவது செய்யலாம். ஜப்தியினின்றும் விலக்கும் விளைபொருளையோ அல்லது சேமித்து வைக்கத் தேவையில்லாத விளை பொருளின் விற்று முதல் தொகையையோ (ஜப்தி செய்த காலத்தில் யாருடைய சுவாதீனத்தில் விளை பொருள் இருந்ததோ) அவரிடம் திருப்பித் தரும்படி கோர்ட்டார் உத்தரவிட வேண்டும்.

(17) ஜப்தி செலவுகள். மூன்ருவது சப் செக்ஷன்படி விளை பொருள் ஜப்தி செய்யப் பெற்ருல் ஷை ஜப்தியை விலக்கும் போது கமிட்டியார் செலவு தொகைகுறித்து உத்திரவிட வேண்டும். கோர்ட்டார் 16வது சப் செக்ஷனின் கீழ் உத்திரவிடும்போதோ அல்லது அதன் கீழ் தாக்கல் செய்த வியாஜ்ய தீர்மானத்திலோ அத்தகைய (செலவுதொகை குறித்த) ஆர்டரைச் செய்யவேண்டும்.

7. சர்ட்டிபிகேட் கிடைக்கும் வரை அல்லது ஜப்தியை விலக்குமட்டும் வழக்குத் தொடரத் தடை. நிலத்தின் விளைபொருளை 6-வது செக்ஷன்படி ஜப்தி செய்வித்த எவனும் (12) வது சப் செக்ஷன்படி சர்ட்டிபிகேட் பெறும் வரையிலோ அல்லது ஜப்தியை விலக்கும் வரையிலோ சேவா, கூலி, கடன் வட்டி அல்லது வாடகைக்காக யாதொரு வியாஜ்ஜியமும் தொடரமுடியாது.

அத்தியாயம். 3.

அபிவிருத்தி.

8\. நிலச்சுவான்தார் உரிமை

நிலத்தைக் குடியானவன் அனுபோகத்தில் வைத்திருந்தாலும் நிலச்சுவான்தார் தந்நிலத்தை அபிவிருத்தி செய்யலாம்.

9\. குடியானவனால் செய்யப்பெற்ற அபிவிருத்திக்கு ஈடு

நிலச்சுவான்தாரிடமிருந்து எழுத்து மூலம் அநுமதிபெற்று நிலத்தில் குடியானவன் செய்யும் அபிவிருத்திக்குத் தான் அந்நிலத்தைக் காலி செய்யும்போது நிலச்சுவான்தாரிடமிருந்து ஈடு பெறுவதற்கு உரிமையுண்டு. அத்தகைய அபிவிருத்திக்காக சிவில் கோர்ட்டில் ஈடு பெற வேண்டுமென்று, வியாஜ்ஜியம் தொடரவியலாது; ஆனால் குடியானவன் செய்து கொள்ளும் மனுவின் பேரில் (இந்த செக்ஷன் கீழ்) ரெவின்யூ ஆபீசர் அத்தகைய அபிவிருத்திக்குள்ள ஈடைப்பற்றித் தீர்மானிக்க வேண்டும்.

தவிர நிலச்சுவான்தாரால் சார்ஜ்ஜாக வசூலிக்கக்கூடிய யாதொரு தொகையும் பாக்கியாயிருந்தால் அநுமதிக்கப்பெறும் ஈட்டை அதற்குச் சரி செய்யப்படும்.

10\. 9-வது செக்ஷன்கீழ் ஈட்டின் உரிமைகளைத் தீர்மானிக்கும் ஒரு ரெவினியூ ஆபீசர் நிலச்சுவான்தாரால் குறிப்பிட்ட ஒருவரும், குடியானவனால் குறிப்பிட்ட ஒருவரும் ஆகிய இரண்டு தாமாடிகளின் உதவியைக் கொண்டு விசாரணை செய்ய வேண்டும். குறிப்பிட்ட மாதிரியில் நோட்டீஸ் கிடைத்த பிறகு நிலச்சுவான்தாரோ, குடியானவனோ ஒரு தாமாடியை நியமிக்கத் தவறினால் ரெவின்யூ ஆபீசர் நிலமிருக்கும் டவுன்ஷிப்பிலுள்ள விவசாயிகளிலிருந்து தாமாடியைத் தாமே தேர்ந்தெடுக்க வேண்டும்.

11. ரெவினியூ ஆபீசர் 9-வது செக்ஷன் கீழ் ஈடாகக் கொடுக்க வேண்டிய தொகையை மதிப்பிடும் போது —

ஈட்டுத்தொகையை நிர்ணயிக்கும் போது யோசிக்கவேண்டியவை.

(a) அபிவிருத்தியால் நிலத்தின் விளைபொருளின் அதிகரிப்பையும் அல்லது அவ்விளைபொருளின் விலை மதிப்பின் கூடுதல்களையும்;

(b) அபிவிருத்தியின் நிலைமையையும், அதன் பலனிருக்கக்கூடிய கால அளவையும்;

(c) அபிவிருத்தியைச் செய்வதற்கு அவசியமான முதலையும் உழைப்பையும்;

(d) அபிவிருத்தி செய்ததை யுத்தேசித்து குடியானவனுக்கு நிலச்சுவான்தாரால் தரப்பெற்ற சேவாக் குறைவையும், வஜாவையும், இதர சௌகர்யங்களையும்;

(e) குடியானவன் அபிவிருத்தியின் பலனை அனுபவித்த கால அளவு முதலியவைகளையும் கவனிக்க வேண்டும்.

12. இவ்வத்தியாயத்தின் கீழ் குடியானவன் தனக்குக் கிடைக்க வேண்டிய நஷ்டஈடு உரிமையை தான் குடியாண்மையைக் காலிசெய்த 60 தினங்களுக்குள் ரெவினியூ ஆபீசரிடம் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

அத்தியாயம் 4.

சேவா சம்பந்தமான விஷயங்கள்

ரெவினியூ ஆபீசர் பொருத்தமான சேவாவை நிர்ணயித்தல்

13. (1) ஒரு நிலச்சுவான்தாரோ அல்லது குடியானவனோ 18-வது செக்ஷனில் உள்ள விஷயங்களை யனுசரித்து நிலத்தின் பொருத்தமான சேவாவை நிர்ணயிக்கும்படி மனுச்செய்து கொள்ளலாம்.

(2) அத்தகைய மனு கிடைத்ததும் ரெவினியூ ஆபீசர் எதிர்க்கட்சிக்காரருக்கு நோட்டீஸ் கொடுக்க வேண்டும். தன்னால் நியமிக்கப்பெற்ற இரண்டு தாமாடிகளின் உதவியால் அப்பிரதேசத்தில் விசாரணை செய்து நிலத்துக்குப் பொருத்தமான சேவாவை நிர்ணயித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டும். தாமாடிகளில் குடியானவனால் குறிப்பிடப்பெற்ற ஒருவரையும் நிலச்சுவான்தாரால் குறிப்பிடப்பெற்ற மற்றொருவரையும் நியமிக்க வேண்டும். குறிப்பிட்ட மாதிரியில் நோட்டீஸ் கிடைத்த பிறகு நிலச்சுவான்தாரோ, குடியானவனோ ஒரு தாமாடியை நியமிக்கத்தவறினால் ரெவினியூ ஆபீசர் நிலமிருக்கும் டவுன்ஷிப்பிலுள்ள விவசாயிகளிலிருந்து தாமாடியைத் தாமே தேர்ந்தெடுக்க வேண்டும்.

(3) இந்த செக்ஷன் கீழ் நடைமுறை செய்யும் ரெவினியூ ஆபீசர் விசாரணையின் எந்த நிலையிலாவது தமக்கு விவசாய வேலைகள் ஆரம்பிக்கு முன் பொருத்தமான சேவாவை நிர்ணயிக்க முடியாதென்று தோன்றினால் கக்ஷிக்காரர்களைக் கேட்டும் அவர்கள் வாக்குமூலங்களைப்பதிவுசெய்து கொண்டும் குடியானவன் பின்னால் தம்மால் (ரெவினியூ ஆபீசரால்) நிச்சயிக்கப்பெறும் சேவாவுக்கு ஒப்புக் கொள்வதாக உறுதி கூறினால் அவன் அந்நிலத்தைப் பயிரிடலாமென்று தற்காலிகமான ஒரு ஆர்டர் செய்யலாம். குடியானவன் அத்தகைய

உறுதியைக் கொடுக்க மறுத்தால் ரெவினியூ ஆபீசர் அவனை அப்புறப்படுத்துவதோடு விசாரணையை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

14. (1) கிராமப் பகுதிக்குக் குறையாத குறிப்பிட்ட பகுதிக்கு கவர்னர் ஒருசேவா நிர்ணய ஆபீசரை நியமிக்கலாம். அந்தஆபீசர் அப்பகுதிகளில் வசிப்பவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்த பின் அப்பகுதிகளில்வசிப்பவர்களினின்றும் நியமிக்கப்பெறும் தாமாடிகளோடு விசாரணை நடத்தி நிலச்சுவான்தாரரையும் குடியானவனையும் அவர்களால் கொண்டு வரப்பெறும் ஒருவர் அல்லது பலர் வாக்கு மூலங்களையும் கேட்டு அப்பகுதியின் ஒவ்வொரு குடியாண்மைக்கும் பொருத்தமான சேவாவை நிர்ணயிக்க வேண்டும்.

சேவா நிர்ணய ஆபீசர் பொருத்தமான சேவா நிர்ணயித்தல்

(2) சேவா நிர்ணய ஆபீசர் நியமனம் கெஜட்டில் பிரசுரிக்கப்பெறும்.

15. பொருத்தமான சேவாவை நிர்ணயிக்கும் போது ரெவினியூ ஆபீசர் அல்லது சேவா நிர்ணய ஆபீசர் அந்நிலம் போதிய உழைப்போடு பயிரிடப்பெற்றால் உண்டாகும் கண்டு முதல், குடியானவனும் அல்லது அவன் குடும்பத்திய அவனோடு வசிப்பவர்களால் செய்த வேலை உட்பட பயிரிடுவதில் தேவையுள்ள கூலியாட்களுக்குக் கொடுப்பது முதலிய பயிர்ச் செலவு, போட்டியில் நிர்ணயிக்கப்பட்ட அந்நிலத்திற் குரிய அல்லது அது போன்ற சமீபத்திலுள்ள இதர நிலங்களுக்கு நீண்டகால அளவுக்குக் கொடுத்துவரும் சேவா சேவா ரொக்கமாகக் கொடுப்பதானால் அச் சேவாவின் பருவ விலை, முந்திய ஐந்து வருஷங்களுக்குச் சராசரி செலுத்தி வந்த அந்நிலவரி, அக் குடியாண்மை நிலம் புதிதாயிருந்தால் அது போன்ற இதர நிலங்களின் மேல் செலுத்தியநில

பொருத்தமான சேவாநிர்ணயிக்கும் போது யோசிக்க வேண்டியவைகள்

வரி மற்றும் பொருத்தமெனத் தோன்றும் இதர விஷயங்களையும் கவனிக்கவேண்டும். ஆனால் குடியானவனுடைய சாமர்த்தியமின்மை, வியாதி, சக்தியின்மை முதலிய போன்றகுறைகளால் ஏற்படும் கண்டு முதலின் குறைவைக்கவனிக்கப்படாது.

16. இந்த அத்தியாயத்தின் கீழ் ஒரு குடியாண்மையின் பொருத்தமான சேவா விளைபொருளால் நிர்ணயிக்கப்பெறின், அப்படி நிர்ணயிக்கும் உத்திரவு (ஆர்டர்) ஷை சேவாவை எத்தகைய அளவு பாத்திரத்தால் அளந்து தரப்பெற வேண்டுமென்பதையும் குறிக்க வேண்டும்.

17. பொருத்தமான சேவா நிர்ணயித்த உத்தரவின் ஆரம்ப தேதி

யாதொருநிலத்தின் பொருத்தமானசேவாவை நிர்ணயித்த ரெவினியூ ஆபீசர் அல்லது சேவா நிர்ணய ஆபீசர் உத்திரவு அல்லது 20 அல்லது 21வது செக்ஷன்கீழ் செய்யப்பெற்ற உத்திரவு இவைகளில் அவ்வுத்திரவுகள் அமுலுக்குவரும் குடியாண்மை வருஷத்தையும் குறிக்க வேண்டும்.

18. பொருத்தமான சேவாநிர்ணயித்த உத்தரவு அமுலிலிருக்கும் காலம்

ஆர்டரில்குறிப்பிட்டபடி அப்பால் மூன்று வருஷங்களுக்குக்குறையாத ஒரு கால அளவுக்கு ரெவினியூ ஆபீசர் அல்லது சேவா நிர்ணய ஆபீசரால் நிர்ணயிக்கப் பெற்ற பொருத்தமான சேவாசெல்லுபடியாகும். ஆனால் ரெவினியூ ஆபீசர் ஆர்டரில் குறிப்பிட்ட காலம் முடிவடையவில்லையென்றாலும் அதற்குள் சேவா நிர்ணய ஆபீசர் செய்யும் ஆர்டர் முதன்மை பெறும். மேலும் டெப்யூடி கமிஷனர் தனிப்பட்ட காரணங்களுக்காக ஒரு ரெவினியூ ஆபீசர் அல்லது] சேவா நிர்ணய ஆபீசர் ஆர்டரை செலாவணியில்லாமல் செய்து விடலாம்.

19. (1) சேவாக்களைக் குறித்து வேறெவ்வித ஒப்பந்தமிருப்பினும் இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு எந்தக் குடியானவனும் தன் குடியாண்மைக்கு பொருத்தமானசேவாவுக்கு மேல்நிலச்சுவான்தாருக்குச் செலுத்தக்கடமைப் பட்டவனில்லை. சிவில் கோர்ட்டில் சேவா பாக்கிக்காக வியாஜ்ஜியம் தொடர்ந்தாலும், 5வது அத்தியாயத்தின் கீழ்குடியானவன்புதுக்குத்தகைதரும்படி கோரும் போதும்கேட்கப்பட்ட சேவா பொருத்தமான தல்ல வென்று வாதிக்கலாம். ஆனால் இந்த அத்தியாயத்தின் ஷரத்துக்களின் படி. ரெவினியூ ஆபீசர் அல்லது சேவா நிர்ணய ஆபீசரால் உத்திரவிடப்பெற்ற சேவா பொருத்தமான சேவாவாகக் கொள்ளப்பெறும்.

குடியானவனுக்கு பொருத்தமான சேவாவைச் செலுத்த உரிமை

(2) அத்தகைய வாதம் செய்யப் பெற்று பொருத்தமான சேவா நிர்ணயிக்கப் பெறாமலிருந்தால் சிவில் கோர்ட்டு ஷை விஷயத்தை அதிகாரம் பெற்ற ரெவினியூ ஆபீசருக்கு ஷை நிலத்தின் பொருத்தமான சேவாவை நிர்ணயிக்கும்படி கேட்கவேண்டும். ரெவினியூ ஆபீசர் 13வதுசெக்ஷனில் சொல்லியபடி எல்லாவிசாரணையும்தொடங்கவேண்டாம். ஆனால் அவர் இரு கக்ஷிக்காரர்களுக்கும் நோட்டீசு விடவேண்டும். தவிர குடியானவனுக்கு இதற்கு முன்பே பொருத்தமான சேவாவை நிர்ணயிக்கும்படி கோரக்கூடிய சமயமிருந்திருப்பின் இந்த செக்ஷனின் கீழ் நடவடிக்கை எடுக்கும் ரெவினியூ ஆபீசர் வேறு விதம் நிரூபிக்கப்பெற்றாலொழிய நிலச்சுவான்தாரும் குடியானவனும் சம்மதித்த சேவா பொருத்தமானதென்று கொள்ளவேண்டும்.

20. (1) 18வதுசெக்ஷனில் என்ன விஷயம்கண்டிருந்தாலும் கக்ஷிக்காரர்களிடையே குடியானவன் செலுத்தவேண்டியசேவாவுக்காகவுள்ள எழுத்துமூலம்ஒப்பந்தத்திற்குட்பட்டுவிவசாயியால் கொடுக்கப்படவேண்டிய சேவா:-

நிலச்சுவான்தாரால்செய்யப்பட்ட அபிவிருத்திக்காக சேவாவை உயர்த்துதல்

(i) ஒப்புக்கொண்ட பிறகோ அல்லது பொருத்தமான சேவா நிர்ணயிக்கப் பெற்ற பிறகோ நிலச்சுவான்தாராலோ அல்லது அவர் செலவிலோ நிலத்திற்கு செய் நேர்த்தி செய்யப் பெற்றுள்ளதென்று காரணம் காட்டி நிலச்சுவான் தார் கேட்டுக்கொண்டால் ரெவினியூ ஆபீசர் 13-வது செக்ஷனில் கண்டுள்ளபடி விசாரணை செய்ததின் மேல் சேவாவை உயர்த்தலாம்.

(ii) தற்போதைய சேவாவுக்கு சம்மதித்த பிறகு அல்லது பொருத்தமான சேவா நிர்ணயிக்கப் பெற்ற பிறகு நிலச்சுவான்தாரால் அல்லது அவர் தரப்பால் செய்நேர்த்தி குறைந்து விட்டதென்று நிரூபித்து குடியானவனால் மனுச்செய்து கொள்ளப்பெற்றால் ரெவினியூ ஆபீசர் 13வது செக்ஷனில் குறித்துள்ளபடி விசாரணை செய்ததின் பேரில் நிலச் சேவாவைக் குறைக்கலாம்.

(2) அத்தகைய கூட்டுதல் அல்லது குறைத்தல் முறையே குடியாண்மை நிலத்தின் செய்நேர்த்தியாலும் அதில்லாமையாலும் உண்டாகும் வருடாந்தர கண்டு முதலில் கூடுதல் குறைவுக்கு பொருத்தமாக இருக்க வேண்டும்.

(3) அவ்விதம் உயர்த்திய அல்லது தாழ்த்திய சேவா டி நிலத்தின் பொருத்தமானசேவாவாகும்.

21. அபிவிருத்தி அல்லது விருத்தி குறைவின் பலன் நீங்கும்போது பொருத்தமான சேவாவை மாற்றுதல்

எந்தகுடியாண்மையின் பொருத்தமான சேவாவும் 20வது செக்ஷனின் கீழ் உயர்த்தப்பெற்றோ தாழ்த்தப்பெற்றோ விருப்பினும் அல்லது நிலச்சுவான்தார் அல்லது அவருக்காக ஏற்படுத்திய செய்நேர்த்தி குறைவுக்காக ரெவினியூ ஆபீசர் அல்லது சேவா நிர்ணய ஆபீசரால் நிர்ணயிக்கப் பெற்றுள்ள நடைமுறை ஆர்டர்படியான சேவா

வை குடியானவன் அல்லது நிலச்சுவான்தார் பொருத்தமான சேவா நிர்ணயிக்கப்பெற்ற பிறகு அல்லது இந்த செக்ஷன் கீழ் கடைசியாக மனுச் செய்து கொண்டதின் மேல் கூட்டிய அல்லது குறைத்த அல்லது மாற்றிய ஆர்டரானதின் பிறகு நிலத்தின் செய்நேர்த்தி அதிகரித்துள்ளது அல்லது குறைந்துள்ளதென்று காரணம் காட்டி (மனுச்செய்து கொண்டால்) அம்மனுவின் பேரில் மாற்றவோ, திருத்தவோ, ரத்து செய்யவோ இயலும்.

22. (1) யாதொரு காரணத்தை உத்தேசித்தும் எந்த நிலத்திற்காகக் கட்ட வேண்டிய வரி முழுதுமோ அல்லது ஒரு பகுதியோ வஜா செய்யப் பெற்றால் நிலச்சுவான்தார் அவ்விதம் நில வரி வஜா செய்யப்பெற்ற காலத்திற்கு நிலத்திற்குச் செலுத்த வேண்டிய நிலவரியில் வஜா செய்யப்பெற்றவரி மொத்த வரியில் யென்ன ஈவோ அந்த ஈவு சேவாவைக் குறைக்க வேண்டும்.

நிலவரி வஜா செய்தால் சேவாவை வஜா செய்ய அதிகாரம்

(2) வஜா செய்யப்பெற்ற அல்லது வஜா செய்யும்படி உத்திரவிடப்பெற்ற எந்த சேவாவையும் வசூலிக்க வேண்டி வியாஜ்ஜியமொன்றும் தாக்கல் செய்யவியலாது.

(3) முதலாவது சப் செக்ஷனில் குறிப்பிட்டபடி செலுத்த வேண்டிய சேவாவுக்கு அதிகமாய் நிலச்சுவான்தார் வசூல் செய்திருப்பின், வேறுவிதமான எவ்வித ஒப்பந்தமிருப்பினும், ரெவினியூ ஆபீசரிடம் மனுச்செய்து அவ்விதம் அதிகமாக வசூலிக்கப் பெற்ற சேவாவை திருப்பி வாங்க குடியானவனுக்கு உரிமையுண்டு.

(4) நிலவரி வஜா செய்யும்படி மனுச் செய்திருப்பது முடிவடையாதிருக்கும்போது குடியானவனுக்கு

வஜா செய்த சேவாவானது பின்னுல் முதலாவது சப் செக்ஷனில் குறிப்பிட்டபடி கிடைக்க உரிமை யுள்ளதற்கு அதிகமானதெனக் கண்டால், அத்தகை ய அதிக சேவாவை நிலச்சுவான்தார் ரெவினியூ ஆபீசரிடம் மனுச்செய்து திருப்பி வாங்கிக் கொள்ள உரிமையுடையவர்

ஆனுல் அத்தகைய வித்தியாசத்தை 5-வது அத்தி யாயத்தின் விஷயங்களுக்காகக் குறிப்பிட்டுள்ள "நிலச்சேவா பாக்கி" யாகக் கருதப்பெருது.

மேலும் ரெவினியூ ஆபீசர் தனக்கு யுக்தமென்று தோன்றும் காலங்களில் தவணைகளில் அதனை செலுத்தும்படியும் உத்திரவிடலாம்.

அத்தியாயம் 5.

குடியாண்மைகளைப் பராதீனம் செய்வதில்வரம்பு.

23. குடியாண்மையைப் புதுப்பித்துக் கொள்ள குடியானவர்களின் உரிமைகள்.

தான்கொடுக்கவேண்டிய சேவாவில்பாக்கிவைத்துக்கொள்ளாது நிலச்சுவான்தாருக்குப்பாதகமாக நடந்துகொள்ளாத எந்தக்குடியானவனுக்கும் இந்தஅத்தியாயத்தில் கண்டிருக்கும் விஷயங்களுக்குட்பட்டுஒவ்வொருகுடியாண்மை வருடத்திற்கும் ஒருமுறைதன் குத்தகையைப் புதுப்பித்துக் கொள்ள உரிமையுண்டு.

24. (1) புதுக்குத்தகைக்குமனு.

நடப்புக்குடியாண்மை வருஷத்திய சேவாவைப் பூராவாகச் செலுத்திய எந்தக்குடியானவனும் மற்றொரு குடியாண்மை வருஷத்திற்குத்தன்குத்தகையை (லீசை)ப்புதுப்பித்துக்கொள்ள விரும்பினால் அத்தகையதன் எண்ணத்தையும் தான் கொடுக்கச்சம்மதிக்கும் சேவாவையும் எழுத்து மூலம் நடப்புக் குடியான்மை வருஷம் முடியுமுன் நிலச்சுவான்தாருக்கோ அல்லது அவர் ஏஜண்டுக்கோ தெரிவிக்க வேண்டும்.

(2) நிலச்சுவான்தாரோ அல்லது அவர் ஏஜண்டோ அத்தகைய விவரம் கிடைத்த ஏழு தினங்களுக்குள் குறிப்பிட்ட முறையில் எழுத்து மூலம் குத்தகை (லீஸ்) பாரத்தில் கொடுக்க ஒப்புக் கொண்ட வாடகைக்கு மனுதாரிடம் குத்தகைப்பத்திரம் தரவேண்டும் அல்லது குடியானவன் கொடுப்பதாகச் சொல்லும் வாடகைக்கு குத்தகை (லீசு) தர சம்மதமில்லை அல்லது குத்தகையே (லீசே) தர சம்மதமில்லையென்பதை எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். மனுதார் கொடுக்கச்சம்மதித்த சேவா

வினின்றும் வேறு சேவாவுக்கு குத்தகை (லீசு) தருவதற்கு நிலச்சுவான்தார் சம்மதப்பட்டால் அத்தகைய சேவாவையும்சம்மதத்தையும் எழுத்து மூலம் மனுதாருக்குத் தெரிவிக்க வேண்டும். ஷை ஏழு தினங்களுக்குள் எழுத்து மூலம் அறிவிக்கத் தவறினால் குத்தகை (லீசு) கொடுக்க மறுப்பதாகக் கொள்ளப்பெறும்.

25. வெளிப்படுத்தாதிருக்க ஆர்டர் தரும்படி மனுச்செய்தல்.

முடிவடையும் குத்தகையில் (லீசில்) எத்தகைய நிபந்தனைகள் கண்டிருந்தாலும் புதுக் குத்தகை (லீசு) தேவை யென்று மனுச் செய்து கொண்ட குடியானவன் அவ்வித குத்தகை (லீசு) மறுக்கப்பெற்றாலோ அல்லது தான் பொருத்தமென்று நினைக்கும் சேவாவுக்குத்தர மறுத்தாலோ ரெவினியூ ஆபீசரிடம் அடுத்த குடியாண்மை வருஷத்திற்கு குத்தகை (லீசு) தரும்படி உத்திரவிட வேணுமாய்த் தான் குறிக்கும் பொருத்தமான சேவாவைத் தரத்தயாரா யிருப்பதாகவும் நிலச்சுவான் தாரிடம் தான் முன்னும் ஒழுங்காகநடந்து கொண்டதாகவும், இனிமேலும் ஒழுங்காக நடக்கத் தயாராயிருப்பதாகவும் காரணம் காட்டி மனுச்செய்து கொள்ளலாம்.

ஆனால் அத்தகைய மனு குடியாண்மை வருஷத்தின் முடிவுக்குப் பதினைந்து தினங்களுக்கதிகமாக காலம் க்ரமித்து கொடுக்கப்பெற்றால் அங்கீகரிக்கப் பெறமாட்டாது.

26. கட்சிக்காரர்ஆஜராதல்.

ரெவினியூ ஆபீசர் அத்தகைய மனுவைப் பெற்றதும் கூடிய சீக்கிரத்தில் மனுதாரையும் நிலச்சுவான்தாரையும் தன்முன் ஆஜராகும்படி சம்மன் பிறப்பித்து வரவழைக்க வேண்டும்.

27. (1) நிலச்சுவான்தார் குறிப்பிட்ட சமயம் ஆஜராக தவறினுல் ரெவினியூ ஆபீசர் மனுவை ஆமோதித்து உத்திர விடுவதோடு 4-வது அத்தியாயப்படி முன்னமேயே அந்த அத்தியாயத்தின் கீழ் குடியாண்மையின் பொருத்தமான சேவா நிர்ணயிக்கப் பெறுதிருந்தால் அத்தகைய பொருத்தமான சேவாவையும் நிர்ணயிக்க வேண்டும். அத்தகைய உத்திரவு நிலச்சுவான்தாரால் மனுதாருக்குக் குடியாண்மை வருஷத்திற்குக் குறிப்பிட்ட பாரத்தில் குத்தகை (லீசு)கொடுக்கப்பெற்றதாகக் கருதப்பெறுவதோடு அத்தகைய (அதிகாரமும்) அமுலும் அதற்குண்டு.

கட்சிக்காரர்களில் ஒருவர் அல்லது மற்றொருவர் ஆஜராகாது போனுல் நிகழக் கூடியவை.

(2) குறிப்பிட்ட சமயம் குடியானவன் ஆஜராகத் தவறினுல் ரெவினியூ ஆபீசர் அவன் மனுவைத் தள்ள வேண்டும்.

28. குறிப்பிட்ட சமயம் நிலச்சுவான்தார் ஆஜராகி தான் குத்தகை (லீசு) கொடுக்க மறுப்பதற்குக் காரணம் தானே நிலத்தைப் பயிரிட நினைப்பதனுல் என்று எழுத்து மூலம் ஸ்டேட்மெண்டு ஒன்று தாக்கல் செய்தால் ரெவினியூ ஆபீசர் தனக்கு நிலச்சுவான்தார் விவசாயிஎன்றும் அவர்எண்ணம் உண்மையானதென்றும் திருப்தியாகத் தோன்றினுல் குடியானவன் மனுவைத் தள்ள வேண்டும்.

நிலச்சுவான்தார் தானே நிலத்தில் வேலே செய்ய எண்ணுவதாய்த் தெரிவித்தால் நிகழக் கூடியவை.

29. விவசாயி அல்லாத நிலச்சுவான்தார் ஒருவர் குறிப்பிட்ட சமயத்தில் ஆஜராகி தான் புதுக் குத்தகை (லீசு) கொடுக்க மறுத்ததன் காரணம் தானே நிலத்தைத் தன் சொந்தக்கைகளால் தன் முக்கிய ஜீவனுர்த்தமாகப் பயிரிட நினைப்பதாகவும் அத்தகைய தன்எண்ணத்தைக் குடியாண்மை வருஷம் முடிய

நிலச்சுவான்தார் தன்னுடைய முக்கிய ஜீவனுேபாயமாக தன் சொந்தக்கைகளாலேயே நிலத்தில் வேலே செய்ய எண்ணுவதாகத் தெரிவித்தால் நிகழக் கூடியவை.

ஆறு மாதத்திற்குமுன்பே நோட்டீசு மூலம் குடியானவனுக்குத் தெரிவித்திருப்பதாகவும்எழுத்து மூலம் ஒரு ஸ்டேட்மெண்டு தாக்கல் செய்தால் ரெவினியூ ஆபீசர் (நிலச்சுவான்தாரின்) எண்ணம் உண்மையானதென்றும் நோட்டீசும் உண்மையாகவே கொடுக்கப்பெற்றுள்ளதென்றும் தான் திருப்தியடைந்தால் குடியானவனுடைய மனுவைத்தள்ள வேண்டும்.

30. நிலச்சுவான்தார் குடியாண்மையை சில சுற்றத்தார்களுக்குக் கொடுக்க எண்ணுவதாகத் தெரிவித்தால் நிகழக்கூடியவை.

நிலச்சுவான்தார் குறிப்பிட்ட சமயம் ஆஜராகிதான் குத்தகை (லீசு) கொடுக்க மறுத்ததன் காரணம் குத்தகையைத் (லீசை) தன்னுடைய மகன், மகள், சகோதரன், மைத்துனன், மருமகன், சகோதரி அல்லது பேரப்பிள்ளைக்குக் கொடுக்க நினைத்ததாலென்றும் அத்தகைய தன் எண்ணத்தைக்குறித்து குடியாண்மைவருஷம் முடிய ஆறு மாதத்திற்குமுன்பே நோட்டீசுமூலம் குடியானவனுக்குத் தெரிவித்திருப்பதாகவும் எழுத்து மூலம் ஸ்டேட்மெண்டொன்று தாக்கல் செய்தால் ரெவினியூ ஆபீசர் பயிரிடப் போகும் குடியானவன் தானே நிலத்தைப் பயிரிடும் விவசாயி என்று தனக்குத் திருப்தியுண்டாகி அவனும் தன் சொந்தக் கைகளால் நிலத்தைப் பயிரிடுவதாகப் பொறுப் பேற்றுக்கொண்டால் அத்தகைய அவனுடைய எண்ணமும் உண்மையென்று தோன்றினால், குடியானவன் மனுவைத் தள்ள வேண்டும்.

31. நிலச்சுவான்தார் நிலத்தைத் தரிசுபோட எண்ணுவதாகத் தெரிவித்தால் நிகழக்கூடியவை.

நிலச்சுவான்தார் குறிப்பிட்ட சமயத்தில் ஆஜராகிதான் புதுக் குத்தகை (லீசு) கொடுக்காததற்குக் காரணம் நிலத்தை பூசாரம் (ஊட்டம்) அதிகரிப்பதற்காக தரிசுபோட நினைப்பதாகவும் முந்திய ஆறு வருஷங்களில் நிலம் தரிசு

கிடைக்கவில்லையென்றும் அல்லது போதிய அளவு உரமிடப்பெறவில்லையென்றும் நிரூபிக்கச் சாத்தியமானபடி எழுத்து மூலம் ஓர் ஸ்டேட்மெண்டு தாக்கல் செய்தால் ரெவினியூ ஆபீசர் (குடியானவன்) மனுவைத் தள்ள வேண்டும்.

32. நிலச்சுவான்தார் குறிப்பிட்ட சமயம் ஆஜராகி தான் புதுக்குத்தகை(லீசு) தராததற்குக் காரணம் தான் அந் நிலத்தைக் கைத்தொழில்,குடியிருப்பு, மத சம்பந்தம் அல்லது பொது காரியங்களுக்கு உபயோகிக்க நினைப்பதாய் எழுத்து மூலம் ஸ்டேட்டுமெண்டு தாக்கல் செய்தால் ரெவினியூ ஆபீசருக்கு அத்தகைய எண்ணம் உண்மையென்று தோன்றினால் குடியானவன் மனுவைத் தள்ளவேண்டும்.

33. (1) 28, 29, 30, 31, 32வது செக்ஷன்படி தன் மனுவை நிராகரிக்கப்பெற்றமனுதாரின் உரிமைகள்.

ரெவினியூ ஆபீசர் 28, 29, 30, 31 32வது செக்ஷனில் சொல்லியுள்ள காரணங்களுக்காக மனுவைத்தள்ளினால் மனுதார் தன் குடியாண்மையை முடித்ததின் காரணம் யாதொரு முகாந்தரத்தாலோ பலித மடையவில்லையென்றாவது அல்லது அத்தகைய காரணம் தன் குடியாண்மை முடிந்த மூன்று வருஷகாலத்திற்குள் நழுவியதென்றாவது ருசுப்படுத்த வியலுமானால் மறு முறை மனுச்செய்து கொள்ளலாம்.ஒரு புதுப்பித்த மனு சாதாரணமாக அது புதுப்பிக்கப்பெற்ற வருஷத்தின் அடுத்த குடியாண்மை வருஷத்திற்கென்று கொள்ளப்பெறும். ஆனால் தனிப்பட்ட சந்தர்ப்பங்களில் ரெவினியூ ஆபீசர் யுக்தத்திலும் மனுதார் கோரிக்கையின் பேரிலும் மனு புதுப்பிக்கப்பெற்ற வருஷத்திற்காகவே கொள்ளப்பெறும்.

(2) ரெவினியூ ஆபீசர் 31வது செக்ஷனில் குறிப்பிட்டுள்ளவைகளுக்காக மனுவைத்தள்ளியிருந்தால் மனுதார் மறு முறையும் நிலம் தரிசாயி

ருந்த அல்லது தரிசாய்ப்போட நினைத்த குடியாண்மை வருஷத்தின் மறு வருஷத்தில் தன் மனுவைப் புதுப்பிக்கலாம்.

இரண்டு கட்சிக்காரர்களும் ஆஜரானால் நடைமுறை.

34. (1) 26வது செக்ஷன்படி சம்மன் செய்யப்பெற்றிருந்த நிலச்சுவான்தார் குறிப்பிட்டசமயம் ஆஜராகி 28, 29, 30, 31, 32-வது செக்ஷன்களின்படி எழுத்துமூலம் யாதொரு ஸ்டேட்மெண்டும் தாக்கல்செய்யாவிட்டால் ரெவினியூ ஆபீசர் மனுதாரையும் நிலச்சுவான்தாரையும் விசாரித்து அவர்கள் ஸ்டேட்மெண்டையும் (வாக்கு மூலத்தையும்) கொண்டு வரப்பெறும் பொருத்தமான சாக்ஷியங்களையும் குறித்துக் கொள்ளவேண்டும்.

(2) நிலச்சுவான்தார் தன்னிடம் மனுதார் ஒழுங்காக நடந்து கொள்ளவில்லையென்றாவது அல்லது மனுதார் செலுத்த வேண்டிய சேவாவில் பாக்கியிருக்கின்றதென்றாவது அல்லது விளைபொருளின்மேல் இரண்டாவது சார்ஜாகவுள்ள பணங்களைத்திருப்பித் தரவில்லையென்றாவது அல்லதுபுதுக்குத்தகையின் (லீசின்) பொருத்தமானசேவாவைச் செலுத்தமனுதார் சம்மதிக்கவில்லை யென்றாவது நிரூபித்தால் ரெவினியூ ஆபீசர் (குடியானவனுடைய) மனுவைத்தள்ளிவிட வேண்டும். அதில்லாவிட்டால் ரெவினியூ ஆபீசர் மனுவை ஆமோதித்து குத்தகை (லீசு) தரும்படி உத்திரவிடுவதோடு 4வது அத்தியாயத்தின் கீழ் முன்னமேயே குடியாண்மைக்குப்பொருத்தமான சேவா நிர்ணயிக்கப் பெறாதிருந்தால் ஷை அத்தியாயத்தின் கீழ் பொருத்தமான சேவாவையும் நிர்ணயிக்க வேண்டும். அத்தகைய ஆர்டர் சம்பந்தப்பட்ட குடியாண்மை வருஷத்திற்கு நிலச்சுவான்தார் மனுதாருக்குக் குறிப்பிட்ட பாரத்தில் குடியாண்மையைக் குத்தகைக்கு விட்டதாகக் கருதப்பெறும்.

(3) ரெவினியூ ஆபீசர் குடியானவன் தன் நிலச்சுவான்தாரை சரியாக நடத்திஞனுவென்பதை நிச்சயிக்கும்பொழுது சேவா பொருத்தமற்றிருந்ததென்பதைக்குடியானவனுக்குச்சாதகமானதொரு விஷயமாகக் கொள்ளவேண்டும்.

35. ஒரு குடியானவன் தன் குடியாண்மை நிலத்தில் வசிக்காமலும் சாகுபடிக்கு வழக்கமான காலத்தில் வேலைசெய்யாமலுமிருந்தால்நிலச்சுவான்தார் ரெவினியூ ஆபீசரிடம் குடியாண்மையை ரத்து செய்து விடும்படி ஆர்டர் செய்ய வேணுமாய் மனுச் செய்து கொள்ளலாம். ரெவினியூ ஆபீசர் போதிய விசாரணைக்குப் பிறகு குடியானவன் உண்மையாகவே நிலத்தை விட்டுச் சென்ருனென்று தனக்குத் திருப்தியாகத்தெரிந்தால் அத்தகைய உத்திரவிடலாம். இந்நிலைமைகளில் நிலச்சுவான்தாருக்குத்தானே நிலத்தைப் பயிரிட உரிமையுண்டு.

குடியாண்மையைக் கைவிடல்.

36. இந்த அத்தியாயத்தின் கீழ் ஓர் உத்திரவைப் பிறப்பிக்கும் ரெவினியூ ஆபீசர், நிலத்தின் சுவாதீனத்திலிருப்பவனை அப்புறப்படுத்தி அந்த உத்திரவுக்கு அமுல் கொடுக்கலாம். அத்தகைய ஆர்டரில் ஷை ஆர்டர்படி எந்தத் தேதிக்கு முன்னர் அல்லது எந்தத் தேதியில் செய்யப்பெற வேண்டுமென்பதைக் குறிக்கவேண்டும்.

ரேவினியூ ஆபீசர்செய்த ஆர்டரை அமுலுக்குக் கோண்டு வருதல்.

37. 27வது அல்லது 34வது செக்ஷன்படி செய்யப்பெற்ற உத்திரவின் பேரில் ஒரு குடியாண்மையை சுவீகரித்திருக்கும் யாதொரு குடியானவனும் நிலச்சுவான்தாரின் எழுத்து மூலம் ஆமோதிப்பில்லாமல் நிலத்திலுள்ள தன் உரிமையை எவ்விதத்திலும்பராதீனம் செய்யலாகாது. அவ்விதம் பராதீனம் செய்தால் 35 வது செக்ஷனில் குறித்துள்ளபடி நிலத்தைக் கைவிட்டதாகக் கொள்ளப்பெறும்.

குடியானவன் தன் உரிமையைப் பராதீனம் செய்யக்கூடாது.

அத்தியாயம் 6.

கலம்பகம்.

நிலத்தைவிதைப்பதற்காகவும்பயிர்வளர்ப்பதற்காகவும்தயார் செய்தது குறித்துஅப்புறப்படுத்தப்பெற்றகுடியானவனின்உரிமைகள்.

38. (1) *நியாயமாக நிலத்தின் சுவாதீனத்திலிருந்து அப்புறப்படுத்தப் பெற்ற ஒவ்வொரு குடியானவன் விஷயத்திலும் கீழ்க்கண்ட நிபந்தனைகள் பொருந்தும்:—*

(a) *அப்புறப் படுத்தப் பெறும் தேதிக்கு முன்பு குடியானவன் குடியாண்மையின் எந்தப்பகுதியில் விதைத்திருந்தாலும், அல்லது பயிர் நட்டிருந்தாலும் நிலச்சுவான்தாரின் அபிப்பிராயப்படி அந்நிலத்திலேயே அப் பயிரைக்கவனித்துச் சேர்க்கும் வரையில் பொருத்தமான சேவாவைச்செலுத்துவதானல் இருக்கவோ அல்லது அந்நிலத்தில் விதை விதைக்க, பயிர் நட, அவைகளை மேற் பார்க்க முதலியவைகளுக்கு செலவழித்த முதலையும் கூலிச் செலவையும் நிலச்சுவான்தாரிடம் பெற்றுக் கொள்ளவோ (குடியானவனுக்கு) உரிமையுண்டு.*

ஆனல் 28 முதல் 32 வரையிலுள்ள செக்ஷன் படி முந்திய குடியானவனை விலக்கி நியாயமில்லாத முறையில் அமர்த்தப் பெற்ற குடியானவனை வைத்துக் கொள்ள நிலச்சுவான்தாருக்கு ஒரு உரிமையையும் இந்த செக்ஷன் தராது.

(b) *அப்புறப்படுத்தப்பெறும் தேதிக்கு முன்பு குடியானவன் குடியாண்மையின் எப்பகுதி நிலத்தையும் விதைப்பதற்குத் தயார் செய்து ஆனல் விதைக்காமலோ அல்லது பயிர் நடாமலோவிருந்தால் அத்தகையகுடியானவனுக்கு நிலச்சுவான்தாரிடமிருந்தும் அவ்விதம் நிலத்தைத் தயார் செய்வதற்கான செலவையும் முதலையும் பெற்றுக்கொள்ள உரிமையுண்டு. ஆனல்:—*

(i) அப்பகுதியின் பழக்க வழக்கத்திற்கு விரோதமாக குடியானவன் நிலத்தைத் தயார் செய்திருந்தால் அந்நிலத்தைத் தன் சுவாதீனத்தில் வைத்திருக்கவோ அல்லது அந்நிலத்தைத் தயார் செய்ததற்குரிய தொகையைப் பெறவோ உரிமை கிடையாது.

(ii) நிலச்சுவான்தாருக்குக் குடியானவனை அப்புறப்படுத்தும் காலத்தில் அவனிடமிருந்து சார்ஜ்ஜாக வசூலிக்கக்கூடியதேதவும் பாக்கியாயிருந்தால் அதனை இந்த செக்ஷன் கீழ் குடியானவனுக்குக் கிடைக்க வேண்டியதற்குச் சரி செய்து கொள்ளலாம்.

(2) குடியானவனை அப்புறப்படுத்தும் ரெவினியூ ஆபீசர் முதலாவது சப் செக்ஷன்படி கொடுக்க வேண்டிய ஈட்டுத் தொகையை நிர்ணயிக்க வேண்டும். மேலும் அப்புறப்படுத்தப் பெறும் குடியானவன் மனுச்செய்துகொண்டால் அத்தகையதொகையை நிலச்சுவான்தாரிடமிருந்து வசூலித்துத்தர வேண்டும்.

39. ரெவினியூ ஆபீசரால் அனுமதிக்கப்பெற்ற தொகைகளை நில வரிப் பாக்கிகள் போல் வசூலித்தல்.

9-வது, 22-வது, அல்லது 38-வது செக்ஷன்படி ரெவினியூ ஆபீசரால் உத்திரவிடப்பெற்ற எந்தத் தொகையும் அவரால் நிலவரிப் பாக்கியைப் போன்று வசூலிக்க வியலும்.

40 சில விஷயங்களில் சிவில் கோர்ட்டிற்கு அதிகாரத் தடை

இதற்கு முன் இங்கே விளக்கமாகக் குறிப்பிட்டதைத்தவிர்த்து இச்சட்டத்தின்கீழ் ரெவினியூ ஆபீசரால் தீர்மானிக்கப்பெற வேண்டுமென்று விளக்கமாகக் குறிப்பிட்டு ஒப்படைத்த விஷயங்களை எந்த சிவில் கோர்ட்டிற்கும் தீர்மானிக்க அதிகாரமில்லை.

41. சாக்ஷிபச்சட்டத்தின் (Evidence Act) 91-வது செக்ஷனில் என்ன கண்டிருந்தாலும் ஏஜண்டாகவோ அல்லது கூலிக்காரனுகவோவேலை செய்ய வேண்டுமென்று எழுத்து மூலம் ஒப்பந்தமிருப்பினும் இக்காரணங்களுக்காக தான் உண்மையிலேயே அந்நிலத்தின் குடியானவனென்று நிரூபிப்பதினின்றும் ஒருவனைத் தடுக்க முடியாது.

சாக்ஷியச்சட்டத்தின் 91-வது செக்ஷனிலிருந்தும் விலக்குதல்.

42. எந்த ஒரு குத்தகை (லீசில்) யில் குடியானவன் தன் விளைபொருளை நிலச்சுவான்தாருக்கு அல்லது குறிப்பிட்ட ஒரு மனிதனுக்கு விற்கவேண்டுமென்று கண்டிருக்கும்நிபந்தனை செல்லாது.

குடியானவன் விளைபொருளை குறிப்பிட்டவர்களுக்கு விற்க வேண்டுமேன்று குத்தகையில் குறிப்பதற்குத்தடை.

43. எவனொருவன் மோசமாகவோ அல்லது அயோக்கியத்தனமாகவோ:-

மோசமாகவும் அயோக்கியத்தனமாகவும் விளைபொருளை ஜப்திசெய்வதற்குத்தண்டனை.

(1) 6-வது செக்ஷன் கீழ் தனக்கு ஒரு சார்ஜ் இருப்பதாகச் சொல்லி விளைபொருளை ஜப்தி செய்கிருனே; அல்லது

(2) விளைபொருளை அதன் மேலுள்ள சார்ஜ்ஜுகளைத் தீர்க்கு முன் குடியாண்மையினின்றும் அப்புறப்படுத்துகிருனே,

அவன் ஒரு மாஜிஸ்டிரேட் முன்னுல் குற்றவாளியென்று நிர்மானிக்கப்பெற்றுல் மூன்று மாதத்திற்கு மேற்படாத வெறுங்காவலோ அல்லது ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாத அபராதமோ அல்லது இவ்விரண்டு தண்டனையுமோ அடையலாம்.

மாஜிஸ்டிரேட் தன் யுக்தத்தில் முழு அபராதமோ அல்லது அதனொருபாகமோ வசூலிக்கப் பெற்றால் கஷ்டமடைந்த கக்ஷிக்காரருக்குப் பிரதியாகத்தரும்படி உத்திரவிடலாம்.

5-வது அத்தியாயத்தின் கீழ் விலகும்படி செய்த உத்திரவை மீறுவதற்கான தண்டனை.

44. 5-வது அத்தியாயத்தின்படி ரெவினியூ ஆபீசரால் நிலத்தை விட்டு அப்புறம்போகவேண்டுமெனும் உத்திரவை வேண்டுமென்றே மீறினாலும் அதல்லாமல் ரெவினியூ ஆபீசர் ஆர்டரில் குறிப்பிட்ட தினத்தில் நிலத்தைவிட்டு விலகத்தவறினாலும், மாஜிஸ்டிரேட் முன்னிலையில் குற்றவாளியென்றுகண்டால் ஒரு மாதம் வரை வெறுங்காவலோ அல்லது இருநூறு ரூபாய்க்கு மேற்படாத அபராதமோ அல்லது இவ்விரண்டு தண்டனையுமோ அடையலாம். மாஜிஸ்டிரேட் தன் யுக்தத்தில் அபராதம் அல்லது அதன் ஒரு பகுதியை, வசூலிக்கப்பெற்றால், ரெவினியூ ஆபீசர் எந்த மனுதார் தரப்பில் சாதகமான உத்திர விட்டாரோ அவருக்கு நஷ்ட ஈடாக தரும்படி உத்திரவிடலாம்.

45. (a) எந்த நிலச்சுவான்தாரும் தன்னால் தடுக்கக்கூடாத காரணங்களுக்காக வல்லாமல் 29வது செக்ஷன்படி தான் பொறுப் பேற்றுக் கொண்டதால் தானே சாகுபடி செய்யும்படி அடைந்த நிலத்தை மூன்று வருஷ காலத்திற்குள் பயிரிடத் தவறினாலும் அல்லது பயிர் செய்வதைத் தொடராது விட்டாலும், அல்லது

(b) பொறுப்பேற்றுக்கொண்ட எவனும் தன்னால் தடுக்கக்கூடாத காரணங்களுக்காக வல்லாமல் 30-வது செக்ஷன்படி தான் பொறுப்பேற்றுக் கொண்டதால்சாகுபடிசெய்யும்படி ஆர்டர் செய்யப் பெற்றடைந்த நிலத்தை மூன்று வருஷ காலத்திற்குள் சாகுபடி செய்யத் தவறினாலும் சாகுபடி செய்வதைத் தொடராது விட்டாலும் ஒரு மாஜிஸ்டி

ரேட் முன்னால் குற்றவாளியென்று தீர்மானிக்கப் பெற்றால் மூன்று மாதத்திற்கதிகப்படாத வெறுங் காவலோ அல்லது ஐந்நூறு ரூபாய்க்கு மேற்ப டாத அபராதமோ அல்லது இவ்விரண்டுமோ தண்டனையாய் விதிக்கப்பெறுவர்.

மாஜிஸ்டிரேட் தனக்கு யுக்தமென்று தோன்றி னால் அபராதம் முழுதுமோ அதன் ஒரு பகுதி யோ வசூலிக்கப் பெற்றால்யாருடைய மனு அங்கீ கரிக்கப் பெற்றதோ அந்த குடியானவனுக்கு நஷ்ட ஈடாகத் தரும்படி உத்திரவிடலாம்.

46. உரிமைகளை இழக்க இசையும் ஒப்பந்தங்கள் செல்லாமை

குடியானவனுக்கோ கூலிக்காரனுக்கோ இச்சட் சட்டத்தின் கீழ் கிடைக்கக் கூடிய உரிமைகளுக்கு யோக் கியதை யில்லையென்று ஒப்பந் தங்கள் இருந்தால் அத்த கைய ஒப்பந்தங்கள் செல்லத்தக்கவையல்ல.

47. இச்சட்டத்தின் கீழ் எந்தக் கக்ஷிக்காரரும் செய்ய வேண்டியது அல்லது செய்யக்கூடியதென்று சொல்லியுள்ளதெதையும் அவை குறித்து எழுத்து மூலம் கக்ஷிக்காரர்களால் அனுமதிக்கப்பெற்ற பிரதிநிதிகள் (ஏஜண்டுகள்) செய்யவியலும்.

48. (1) கவர்னர் கீழ்க்கண்டவைகளுக்கு விதிகள் அமைக் கலாம்—

(i) மனுக்கள் செய்துகொள்ள வேண்டிய ரெவினியூ ஆபீசர், அம்மனுக்கள் செய்து கொள்ளும்விதம் அவைகளைப் பரிசீலனை செய்ய வேண்டிய முறை யை குறிப்பிடல்.

(ii) 8-வது செக்ஷன் கீழ் ஜப்தி செய்யப்பெற வேண் டிய விதத்தையும் அதற்குரிய செலவையும் குறிப் பிடல்.

iii) 5வது செக்ஷன் கீழ் விளைபொருள் மேல் உரிமை யாக (சார்ஜ்ஜாக) வசூலிக்கக் கூடிய கடன் தொ

கை ஏக்கர் ஒன்றுக்கு அதிகமாகக் கொடுக்கக் கூடிய வீதமும் அதன் மேல் நிர்ணயிக்கக்கூடிய அதிகமான வட்டி விகிதமும் குறிப்பிடல்

(iv) 6வது செக்ஷன் கீழ் விளைபொருளைக் காவல் செய்ய நியமிக்கப் பெற்றவருக்கு ஒவ்வோர் ஜில்லாவிலும் கொடுக்க வேண்டிய ஊதியத்தை அளவிடல்

(v) 6வது செக்ஷன் கீழ் வேலை பார்க்கும் கிராமக் கமிட்டி அங்கத்தினர்களுக்கு ஒவ்வோர் ஜில்லாவிலும் கொடுக்கவேண்டிய ஊதியத்தை அளவிடல்

(vi) 6வது செக்ஷன் 12வது சப் செக்ஷன் கீழ் தேவையுள்ள சர்ட்டிபிகேட்டின் தன்மையைக் குறிப்பிடல்

(vii) 6வதுசெக்ஷன் கீழ் வேலை பார்க்கும் கிராமக் கமிட்டி அங்கத்தினர்கள் கவனிக்கவேண்டிய நடை முறையைக் குறிப்பிடல்.

(viii) இச் சட்டத்தின் கீழ் நடக்கும் நடவடிக்கைகளில் நிலச்சுவான்தாரிடம் அல்லது குடியானவனிடம் வசூலிக்க வேண்டிய செலவு தொகையைக் குறிப்பிடல்.

(ix) 24, 27, 34வது செக்ஷன்களுக்காக வேண்டிய (ஸ்டாண்டர்ட் லீசு) குத்தகைப் பத்திரங்களை குறிப்பிடல்

(x) குடியானவன் நிலச்சுவான்தாரை ஒழுங்கீனமாக நடத்தியதாக நிர்ணயிக்க வேண்டி நேர்ந்தால் ரெவினியூ ஆபீசர் கவனிக்க வேண்டிய அல்லது கவனிக்கக் கூடிய விஷயங்களைக் குறிப்பிடல்.

(xi) இச் சட்டத்தின் கீழ் ரெவினியூ ஆபீசர்களால் செய்யப்பெறும் ஆர்டர்கள் எந்த ஆபீசர்களிடம் எக் காலத்திற்குள் எம்முறையில் அப்பீல்

செய்து கொள்ளப்பெற வேண்டுமென்பதைக் குறிப்பிடல்.

(xii) 2வது செக்ஷன் கீழ் நிலப்பரப்பைக் குறிப்பிடல்.

(xiii) 10வது செக்ஷன் கீழ் தேவையான ரேட்டுகளை நிர்ணயித்தல்.

(xiv) பொதுவாக இச் சட்டத்தின் விஷயங்களை அமு

வில் கொண்டு வருவதற்காகத் தேவையான விதிகள் எதுவும் குறிப்பிடல்.

(2) இந்த செக்ஷன் கீழ் செய்யப் பெறும் விதிகள் எல்லாம் (பொது ஜன அபிப்பிராயமறிய) கெஜட்டில் முன்னால் பிரசுரிக்கப்பெற்று (தீர்மானமான பின்) மீண்டும் பிரசுரிக்கப் பெறவேண்டும்

குடியாண்மைச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட தேதி.

சேவா நிர்ணயம்

சில ஜில்லாக்கள் குறித்து சர்க்கார் தீர்மானம்

1939-௵ ஜூன்-௴ 1-உ பிறந்த அறிக்கைகள் மூலம் 1939ம் வருஷத்திய குடியாண்மைச் சட்டம் சர்க்காரால் பக்கோ (Pegu) ஐராவடி (Irrawaddy) டெனசரிம் (Tenasserim) டிவிஷன்களிலுள்ள ஜில்லாக்களில் சால்வீன் ஜில்லா, டாங்கோ ஜில்லாவில் தாண்டாங் டவுன்ஷிப், மெர்குவி ஜில்லாவில் விக்டோரியா முனை சப்டிவிஷன் தவிர்த்த பிரதேசங்களில் அமுலுக்கு கொண்டுவரப்பெற்றுள்ளது.

சட்டத்தை வெகு சீக்கிரத்தில் அமுலுக்குகொண்டு வர வேண்டிய நிலையில் இப்பகுதிகள் இருப்பதாகக்கருதப்பெறுகிறது. ஆனால் இச்சட்டத்தைக் காலக்கிரமத்தில் மற்றைய ஜில்லாக்களுக்கும் பரப்புவது குறித்து சர்க்கார் ஆலோசனை செய்து வருகின்றனர்.

சட்டம் அமுலுக்குக்கொண்டு வரப்பெற்றுள்ள பகுதிகளிலுள்ள எல்லா சப் டிவிஷனல் ஆபீசர்கள், ஹெட் குவார்டர்ஸ் அஸிஸ்டெண்டுகள், அக்குன்வுன்கள், எக்ஸ்ட்ரா அஸிஸ்டெண்ட் கமிஷனர் பதவிக்குக் குறைவில்லாத நில ரிக்கார்ட் ஸூப்பிரண்டெண்டுகளும் ஆகிய இவர்கள் சட்டத்தின் 13-வது செக்ஷன்படி ரெவினியூ ஆபீசர்களாக நியமிக்கப்பெற்றிருக்கின்றனர்.

தங்கள் நிலத்தின் பொருத்தமான சேவாவை நிர்ணயித்துக்கொள்ளும்படி விரும்பும் நிலச்சுவான்தார்களும் குடியானவர்களும் டவுன்ஷிப் ஆபீசரிடம் எட்டணா ஸ்டாம்பு ஒட்டிய மனுவைசமர்ப்பிக்கலாம். இம் மனுக்கள் குறித்த வேலைகளை ரெவினியூ ஆபீசர்களுக்கு டெப்டி கமிஷனர் பகிர்ந்தளிப்பார். அம்மனுக்களில் குடியாண்மை நிலங்களை ரெவினியூ ஆபீசர்கள் குறிப்பாய்த் தெரிந்து கொள்ளக்கூடியபடி போதிய விவரங்கள் இருக்க வேண்டும். நடப்புக் குடியாண்மை வருஷத்திற்குச் செல்லுபடியாகும் வாடகை குறித்த உத்திரவுகளுக்காகச் செய்து நொள்ளும் மனுக்களை 1939ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 31-தேதி வரையில் ஏற்றுக்கொள்வதென்று தீர்மானிக்கப்பெற்றுள்ளது. அத்தேதிக்குப் பிறகு மனுக்கள் செய்துக் கொள்ளப்பெற்றால் அவைகளின் பேரில் செய்யும் உத்திரவுகள் அடுத்த வருஷத்துச் சேவாக்களையல்லாமல் நடப்பு வருஷத்துச் சேவாக்களைப் பாதிக்காது.

இச்சட்டம் அமுலிலுள்ள ஜில்லாக்களில் சில அறிகுறியான கிராமப் பிரதேசங்களுக்கு சேவா நிர்ணய ஆபீசர்கள் நியமிக்கவும் சர்க்கார் துரிதமான முயற்சிகள் எடுத்து வருகின்றனர். இக்கிராமாந்தரப் பிரதேசங்களில் சேவா நிர்ணய ஆபீசர்களால் நிர்ணயிக்கப்பெறும் சேவாக்கள் நிலச்சுவான்தாரகளுக்கும் குடியானவர்களுக்கும் பொதுவாக சர்க்கார் பொருத்தமான சேவாக்களை நிர்ணயிக்கும்போது எத்தகைய தரத்தை உபயோகிப்பார்களெனக் காட்டுமென்று கருதப்பெறுகின்றது. சேவாநிர்ணய ஆபீசர்கள் இச் சந்தர்ப்பத்தை இச் சட்டத்தின் கீழ் ரெவினியூ ஆபீசர்களாக நியமிக்கப் பெற்றுள்ளவர்களுக்கு விசாரணையை நடத்த வேண்டிய முறையைக் கற்றுக்கொடுக்க உபயோகித்துக் கொள்வர்.

இரங்கோன், $\frac{5}{27}$ ஜூன் 1939.

சேவா நிர்ணய ஆபீசர்கள் நியமனம்.

1939 ஞூத்திய குடியாண்மைச் சட்டத்தின் 14 வது செக்ஷன்படி கீழ்க்குறிப்பிட்ட கிராமப் பிரதேசங்களுக்கு முதல் பத்தியில் கூறியுள்ளவர்கள் சேவாநிர்ணய ஆபீசர் அலுவல்களைச் செய்யும்படி கவர்னரால் நியமிக்கப் பெற்றிருக்கின்றனர்.

ஆபீசர் பெயர் 1	ஜில்லா 2	டவுன்ஷிப் 3	கிராமப்பகுதி 4
திரு B. W. ஸ்வித்தின் பாங்க், சி. பி. இ., ஐ. சி. எஸ். பெகு டிவிஷன கமிஷனர்.	ஹந்தாவாடி	கூஞ்சாங்கோம் தெற்கு	காமபா
	பெகு	காவா	தாப்யூ
	புரோம்	புரோம்	தாக்கூட்சாக்
ஊ-மாங்-மாங், இரண்டாம் பார்ட்டி செட்டில்மெண்டு ஆபீசர்.	இன்சீன்	தக்கீ	அவுக்கான்யுவா மா
		இன்சீன்	ஹ்லாபடா
		தாந்தப்பின்	லேசே
	ஹந்தாவாடி	கய்யான்	சூடா
		தோங்குவா	தைக்டுகான்
		சௌடான்	படாஜி
	பெகு	நவுலியப்பன் மேற்கு	ஈண்டக்கோன்
		நவுலியப்பன் கிழக்கு	பொடக்போன்
		ஓவ்	சைக்கிலா
	தாராவாடி	நத்தலின்	தேஞாங்
		சிக்கோன்	ஜோபின்க்கான்
			பாடிகோன்
		மின்லா மேற்கு	அவுஷிட்கான்
		லெப்படான்	நவுங்வேங்
	புரோம்	சூடான்	மாயாமன்
		தேகோன்	கண்ணுசின்
		பவுண்டை	மியவுக்கொஞ்சி
ஊ-சா-கைன், ஐ. சி. எஸ்., நாலாவது பார்ட்டி செட்டில்மெண்டு ஆபீசர்.	பாசீன்	பாசீன் கிழக்கு	செய்ங்சவுங்
			காஞ்சிடான் மேற்கு
		கும்பியோ	அகுக்கி
			அட்டாங்
	ஈந்தட்டா	ஈந்தட்டா	சவுங்குயின்
			லேடா
		சுலோன்	தான்லுவின்குயின்
			சுவாமான்
	மூப்பின்	மூப்பின்	எலேக்கலே
		பாந்தனு	வேடாங்
		எவுண்டம்	யுவாத்திட்
		தனுப்பியூ	அக்கியா
திரு. சி. போ அவுங், கில ரிகார்ட்டு சூப்பிரண்டெண்ட், மியாங்மியா.	மியாங்மியா	உவாக்கமா	லெட்காக்
			மயாங்சவுங்
		மோல்மேன்சூன்	சோசான்
		அய்மென்	சோங்கானி
திரு. டபிள்யூ. ஈ. பெல், கில ரிகார்ட்டு சூப்பிரண்டெண்ட், பியாப்போன்.	பியாப்போன்	சயிலா	யோண்டாங்
			டெயின்சூன்
			சூமங்கை
		பியாம்போன்	கோன்னிட்டான்
லெப்டினன்ட் கர்னல் ஹேச். ஆர். பெல்லி ஐ. ஏ., டெனசரிம் டிவிஷன் கமிஷனர்.	டாங்கோ	பியூ	கன்னிக்குயின் கிழக்கு
		யேடசே	யேடாசே
	தத்துவம்	தத்துவம்	செய்க்கரே
ஊ-சா-பியோ, கில ரிகார்ட்டு சூப்பிரண்டெண்ட், டாங்கோ.	டாங்கோ	பியூ	பியூ கிழக்கு
		அவுட்டுன்	நவுஞ்சிடோக்
	தத்துவம்	பாவுங்	தேகோன்

செட்டியார் பிரஸ், இரங்கோன்